செ.வெ.எண்: 350 நாள்: 7.5.2020

**புதுக்கோட்டை நகராட்சி, லெட்சுமிநகரில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.**

---

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (7.5.2020) புதுக்கோட்டை நகராட்சி, லெட்சுமிநகரில் மேற்கொள்ளப்பட்டுள்ள நோய் தடுப்பு நடவடிக்கைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின் படி புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து போர்க்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்றையதினம் புதுக்கோட்டை நகராட்சி, லெட்சுமிநகரில் சென்னை கோயம்பேட்டில் இருந்து வந்த ஒரு நபருக்கு கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டு தற்பொழுது திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதனை தொடர்ந்து புதுக்கோட்டை நகராட்சி, லெட்சுமிநகர் முழுவதும் தடுப்புகள் அமைக்கப்பட்டு வெளியில் இருந்து வாகனங்கள் உள்ளே செல்லாத வகையிலும், உள்ளிருக்கும் நபர்களும் வெளியில் வராத வகையில் 24 மணி நேரமும் கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதியை சுற்றிலும் கிருமிநாசினி தெளிக்கும் பணி மற்றும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தினந்தோறும் தேவைப்படக் கூடிய அத்தியாவசிய பொருட்களான பால், காய்கறிகள், மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வீடுகளுக்கே சென்று வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடிநீர் தங்குதடையின்றி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதி முழுவதும் தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வில் வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**